S.P. Krishnamoorthy D.R.E.,
98422 97223
93450 97223
97505 30998
SINCE 1979
Nikon
HARISON Photo Products
FLASH & CAMERA SERVICE
All Brand Digital Cameras, Flash, Umbrella Lights & Lens Service Etc.,
52, Elango Nagar, Sathy Road, ( Near Balaji Meter Service),
Gandhipuram Coimbatore - 641 044.
E-mail : nikonflashandcameraservice@gmail.com

RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு" திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE திங்கள் நவம்பர் 17 * 2025 * மலர் -1 * இதழ்-169* VOL-1 * ISSUE-169 விலை ரூ.3 * பக்கம் -4

### 13 பேரை பலி வாங்கிய சம்பவத்தில் பரபரப்பு :

# செங்கோட்டை கார் குண்டுவெடிப்பு நடந்த இடத்தில் ராணுவ தோட்டா மீட்பு!

## யார் கொடுத்தது என விசாரணை தீவிரம்!!

புதுடெல்லி, நவ. 17

டெல்லி செங்கோட்டை கார் குண்டு வெடிப்பு நடந்த இடத்தில்இருந்துராணுவத்தால் பயன்படுத்தப்பட்ட 9மிமீ தோட்டாக்கள் மீட்கப்பட்டன.

டெல்லியில் செங்கோட்டைப் பகுதிக்கு அருகே மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதி ஒன்றில் நடைபெற்ற கார் குண்டுவெடிப்பு சம்பவம் நாடு முழுவதும் அதிர்ச்சி அலைகளை எழுப்பியுள்ளது. நவம்பர் 10ஆம் தேதி திங்கட்கிழமை அன்று டெல்லியில் உள்ள செங்கோட்டை மெட்ரோ நிலையத்தின் கேட் எண்.1க்கு வெளியே நின்ற கார் வெடித்து சிதறியதில் குறைந்தது 12 பேர் உயிரிழந்தனர்; பலர் காயமடைந்தனர்.

நவம்பர் 10 ஆம் தேதி டெல்லி செங்கோட்டை அருகே ஏற்பட்ட சக்தி வாய்ந்த கார் வெடிப்பில் 13 பேர் கொல்லப்பட்டனர் மற்றும் பலர் காயமடைந்தனர், இதனால் அந்தப் பகுதியே நிலைகுலைந்தது. அதிக தீவிரம் கொண்ட குண்டு வெடிப்பின் இடிபாடுகள் மற்றும் அதன் பின்விளைவுகளை அதிகாரிகள் தொடர்ந்து ஆவணப்படுத்தி வருகின்றனர்.

சிக்னலில் நின்று கொண்டிருந்த கார் சரியாகமாலை6:52மணிக்கு வெடித்ததாகக் கூறப்படுகிறது. துரதிர்ஷ்டவசமாக அருகிலுள்ள பிற வாகனங்களும் தீப்பிடித்து எரிந்தன. இது மேலும் நிலைமையை சிக்கலாக்கியது. இந்நிலையில், டெல்லியைச் சேர்ந்த ஒருவர் இந்தப் பயங்கரத்தை நேரில் கண்டதை நினைவுகூர்ந்துள்ளார். அந்த நபர் குண்டுவெடிப்பு நடந்த இடத்திலிருந்து





"300 முதல் 400 மீட்டர் தொலைவில்"தான் இருந்ததாக கூறுவதோடு, தன்னை உயிருடன் வைத்திருந்ததற்காக 'கடவுள்களுக்கு' நன்றி என்றும் சோஷியல் மீடியாவில் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே சம்பவம் நடந்த இடத்திலிருந்து டெல்லி காவல் துறை மூன்று 9 மிமீ தோட்டாக்களை மீட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது பொதுவாக .9மி.மீ. தோட்டாக்கள் பாதுகாப்புப் படையினர் மற்றும் காவல்துறையினரால் பயன்படுத்தப்படுவதால் இந்த கண்டுபிடிப்பு முக்கியத்துவம் வாய்ந்தது . இருப்பினும், அந்த இடத்தில் துப்பாக்கி அல்லது ஆயுதப் பகுதி எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை என்று அதிகாரிகள் கூறியதால், அந்த வெடிமருந்துகள் அங்கு எப்படி விழுந்தன என்பது குறித்து கேள்விகள் எழுந்துள்ளன.

அந்த இடத்தில் இருந்த போலீசாருக்கு வழங்கப்பட்ட வெடிமருந்துகளையும் போலீசார் சரிபார்த்துள்ளனர், ஆனால் அவர்களின் தோட்டாக்கள் எதுவும் கணக்கில் வராமல் போகவில்லை, இதனால் தோட்டாக்கள் பணியில் இருந்த பணியாளர்களுக்கு சொந்தமானது என்பதற்கான விஷயங்கள் மறுக்கப்பட்டுள்ளன. இதற்கிடையில், நவம்பர் 10 ஆம் தேதி டெல்லி செங்கோட்டைக்கு முதன்மை சந்தேக நபரான டாக்டர் உமர் நபி ஓட்டிச் சென்ற ஹூண்டாய்காரின் முழுமையான இயக்கத்தைக் கண்டறியும் 43 சிசிடிவி படங்களும் வெளியாகியுள்ளது.

குண்டுவெடிப்பு நடந்த இடத்திலிருந்து எடுக்கப்பட்ட டிஎன்ஏ, உமரின் தாயிடமிருந்து எடுக்கப்பட்ட மாதிரிகளுடன் பொருந்திய பின்னர், அவரைத் தாக்குதலுடன் முறையாக இணைத்து அதிகாரிகள் அவரது அடையாளத்தை உறுதிப்படுத்தினர். குண்டு வெடிப்புக்கு சில மணி நேரங்களுக்கு முன்பு பரிதாபாத் பல்கலைக்கழக வளாகத்திலிருந்து பழைய டெல்லி வரை உமரின் நகர்வை புதிய தெளிவுடன் இந்த இது வரைகண்டிராத படங்கள் காட்டின . பல மாவட்டங்கள், நெடுஞ்சாலைகள் மற்றும் டெல்லியில் உள்ள முக்கிய சோதனைச் சாவடிகளில் உள்ள 5,000 க்கும் மேற்பட்ட சிசிடிவி கேமராக்களில் இருந்து காட்சிகளைப் பயன்படுத்தி அதிகாரிகள் இந்த வழியை ஒன்றாக இணைத்ததாக போலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. தடயவியல் குழுக்கள் அம்மோனியம் நைட்ரேட்டை விட அதிக சக்தி வாய்ந்ததாக சோதனை செய்த ஒரு மாதிரியையாவது அந்த இடத்திலிருந்து அடையாளம் கண்டுள்ளன.மேலும் தோட்டாக்கள் மற்றும் பயன்படுத்தப்பட்ட வெடி பொருளின் பாகங்கள் உள்ளிட்ட 40க்கும் மேற்பட்ட ஆதாரங்களை சம்பவ இடத்திலிருந்து சேகரித்தது. தடயவியல் பகுப்பாய்வு காரில் சுமார் 30 முதல் 40 கிலோ அம்மோனியம் நைட்ரேட் இருந்ததாகக் கூறியது , இந்த அளவு வெடிப்பின் அளவு மற்றும் சக்தியுடன் ஒத்துப் போகிறது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

# தென்காசியில் ஒரு லட்சம் மரக்கன்றுகளை நடவு செய்த சமூக ஆர்வலர் அர்சுணன் பாராட்டி முனைவர் பட்டம் வழங்கி கவுரவிப்பு




























தென்காசி மாவட்டத்தை பூர்வீக இடமாக கொண்டு வாழ்ந்து வரும் இயற்கை அவர்களே சமூக சேவகர் அர்ஜுனன் அவர்கள் சுமார் ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட மரக்கன்றுகள் நட்டு அப்பகுதி மக்கள் அனைவரின் மனதிலும் இடம் பிடித்துள்ளார். இவர் கடையநல்லூர் நகராட்சியில் 30 ஆண்டுகள் பணி செய்து பணி ஓய்வு பெற்றுள்ளார். இவரது மனைவி தமயந்தி ஆசிரியர்பணிபுரிந்து வருகிறார். இவருக்கு விவேக் மற்றும் தீபக் விகாஸ் என்ற இரு மகன்கள் உள்ளனர்.

மேலும் அப்பகுதியில் இயங்கி வரும் லைன்ஸ் கிளப், அலையன்ஸ் கிளப், நல்உள்ளம் அறக்கட்டளை, வள்ளலார் அறக்கட்டளை ஆகிய அமைப்புகளில் உறுப்பினராக இணைந்து பல சேவைகள் செய்து வருகிறார்.

அவர் வாழும் பகுதிகளில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட மரங்கள் குறிப்பாக பனைமரம், ஆலமரம், அரசமரம், போன்ற மரங்களை நடவுடன் விட்டுவிடாமல் அதனை பராமரித்தும் வருகிறார்.

மேலும் அப்பகுதியில் உள்ள முதியோர் இல்லங்களுக்கு சென்று அங்கு வசிக்கும் ஆதரவற்றோர்களுக்கு உணவளிப்பதுடன் பறவைகளுக்கு தினமும் உணவளித்து வருகிறார். இவரது சேவையை அப்பகுதி மக்கள் பாராட்டுவதோடு இவரோடு இணைந்தும் சேவை பணியை செய்து வருகின்றனர்.

இவரது சேவையை பாராட்டி கடந்த 27 வருடங்களில் சுமார் 18 விருதுகளை பல்வேறு அமைப்புகள் வழங்கி உள்ளனர்.

சிறந்த சேவைக்கான விருது, மக்கள் நல சேவை விருது, இயற்கை நேசர் விருது, சாதனையாளர் செம்மல் விருது, மரம் நட்டு பாராட்டு விருது, மரம் சேவை விருது, அப்துல் கலாம் இயற்கை நேசர் விருது, செம்மல்விருது, லயன்ஸ் கிளப் விருது, சேவையாளர் விருது, சமூக சேவை விருது, ரோல் மாடல் விருது, சேவி ரத்னா விருது, பசுமை தந்தை விருது என பல விருதுகளை பெற்றுள்ளார்.

இறுதியாக முனைவர் பட்டமும் பெற்றுள்ளார்.



# தமிழகம் தலை நிமிர, தமிழனின் பயணம்!
## நயினார் நாகேந்திரன் பேச்சு !!

விருதுநகர்,நவ.17.

விருதுநகர்என்கிற இந்தஅழகியமாநகரில், 21வது நாளாக நடைபெறுகிற எழுச்சிப் பயணம்.

இந்த விருதுநகர் மாவட்டம் என்று சொன்னாலே, தமிழகத்தில் தெரியாத ஒருத்தர்கூட இருக்க முடியாது. அத்தனை சிறப்புகள் பெற்ற இந்த விருதுநகர் மாவட்டம், இந்த மண். பராசக்தி அம்மன் அருள் பாலிக்கும் இந்த மண்ணில், வேலவன்அருள்பாலிக்கும் இந்த இடத்தில், இருக்கங்குடி மாரியம்மன் அருள் பாலிக்கும் இந்த சாத்தூர் மண்ணில்... இதே மாவட்டத்தில்தான் ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் அருள் மட்டுமல்ல, தமிழ்நாட்டின் கோபுரத்தின் சின்னமாகவும் (ஸ்ரீவில்லிபுத்தூர் கோபுரம்) விளங்கும் இந்த விருதுநகர் மாவட்டம், அவ்வளவு பெயர்போன மாவட்டம். விருதுநகர் என்று சொன்னாலே எல்லோருக்கும் ஞாபகம் வருவது பெருந்தலைவர் காமராஜர்தான். கல்விக்கண் திறந்த காமராஜர். காமராஜரைத் தந்த மண் இந்த மண். இந்த மண் ஒரு முதலமைச்சரை அல்ல, மூன்று முதலமைச்சர்களைத் தந்த மண் இது. முதலில், சுப்பிரமணிய ராஜா அவர்களைத் தந்த மண் இது. இரண்டாவது முதலமைச்சர், கர்மவீரர் காமராஜர் அவர்கள். மூன்றாவது முதலமைச்சர்யார்என்று தெரியுமா? அதனால்தான்அவர் ஆதங்கத்தோடு பேசினார் பொன்னார் (பொன். ராதாகிருஷ்ணன்) அவர்கள். அவர்களுக்கு உண்மையில் பொண்டாட்டி, மகன்கள் கிடையாது. அவர் பெரிய கோடீஸ்வரர். மூன்று முதலமைச்சர்களைச் சொன்னேன். குமாரசாமி ராஜா, கர்மவீரர் காமராஜர், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். கர்மவீரர் காமராஜர் பையில் பத்து ரூபாய்தான் வைத்திருந்தார். அதே மாதிரி, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் கோடி கோடியாகச் சம்பாதித்தார். அவ்வளவு சொத்தையும் ஏழைகளுக்குக் கொடுத்தார், சத்துணவுக்காகக் கொடுத்தார். அப்படிப்பட்ட உத்தமர்கள் வாழ்ந்த இந்த மண்ணில், இதே ஊரில், இதே மாவட்டத்தில், எவ்வளவு மோசமான சூழ்நிலை உள்ளது என்பதை ஒரு வீடியோ மூலம் பார்ப்போம். திமுக ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, நான் எதற்குச் சொல்கிறேன்என்று சொன்னால், ஒவ்வொரு பிள்ளையும் படிக்க வேண்டும் என்று கண்ணும் கருத்துமாக விளங்கியவர் காமராஜர் அவர்கள். (ஆனால்திமுக) ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, இதே மாவட்டத்தில் மட்டும் 1500 பிள்ளைகள் பிளஸ் 2 படிக்க முடியாமல், தனது படிப்பை நடுவழியில் நிறுத்திவிட்டுச் சென்றுள்ளனர். இதே மாவட்டத்தில் (இப்படி நடக்கிறது) என்று சொன்னால், எவ்வளவு ஒரு மோசமான சூழ்நிலையில் இந்த ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இன்றைக்கு நிறைய வாக்குறுதிகளை இதே மாவட்டத்திற்குச் சொன்னார்கள். கால்வாய் சீரமைப்போம் என்று சொன்னார்கள். செய்தார்களா? இல்லை. பத்தாயிரம் கோடி ரூபாய்க்கு மேலாக நீர் மேலாண்மை அமைப்போம் என்று சொன்னார்கள். இதுவரை ஒரு ரூபாய் கூட அவர்கள் நகர்த்தவில்லை. ஒன்றியம்தோறும் தானியக் கிடங்குகள் அமைப்போம் என்று சொன்னார்கள். ஒன்றும் செய்யவில்லை. எல்லா ஆறுகளிலும் தடுப்பணைகள் கட்டித் தருவார்கள் என்று சொன்னார்கள். அண்ணன் துரைமுருகன் அவர்கள் சட்டமன்றத்தில் பேசினார். இதுவரை செய்யவில்லை. இங்கு, அருப்புக்கோட்டை, ராஜபாளையத்தில் நெசவாளர்கள் அதிகமாக இருக்கும் இந்தப்பகுதி. ஆனால், நெசவாளர்கள்கூட்டுறவுச் சங்கம் மூலம் வட்டி குறைப்போம் என்று சொன்னார்கள். குறைத்தார்களா என்று சொன்னால், இல்லை. இப்படியான ஆட்சிதான் இந்த ஆட்சி. அண்ணன் பொன். ராதாகிருஷ்ணன்அவர்கள் சொன்ன ஒரு விஷயம்: கஞ்சா, போதைப்பொருள்கள் இன்றைக்கு நாடு முழுவதும் அதிகமாய்க் கொண்டுள்ளது. அது தடுத்து நிறுத்தப்பட வேண்டும். எதிர்காலச் சந்ததிகள் பாதுகாக்கப்பட வேண்டும். அதற்காக இன்றே நாம் சூளுரை ஏற்க வேண்டும். அதிமுக, பாஜக, தமிழ் மாநில காங்கிரஸ், தென்னிந்திய ஃபார்வரட் பிளாக், ஐ.ஜே.கே, புதிய நீதிக் கட்சி ஆகிய எல்லாக் கட்சிகளும் ஒன்று சேர்ந்து, நாம் (வருகின்ற) தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணியை வெற்றி பெறச் செய்யப் பாடுபட வேண்டும் என்றரர.





கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி அடுத்த அரசம்பட்டி முத்தமிழ் அரசு மேல்நிலைப்பள்ளி குழந்தைகள் தின விழாவை முன்னிட்டு மாநில அளவில் நடைபெறும் வாலிபால் போட்டியில் பங்கேற்கும் மாணவர்களுக்கு பள்ளியின் முன்னாள் மாணவரும் வாலிபால் விளையாட்டு வீரருமான பம்பாய் ராஜ் என்கின்ற சுந்தரராஜன் அவர்கள் வாலிபால் விளையாட்டுக்கு செல்லும் மாணவர்களுக்கு விளையாட்டு சீருடை வழங்கி மாணவர்களுக்கு வாழ்த்து கூறினார். அவர்களுக்கு பள்ளியின் சார்பிலும் மாணவர்கள் ஆசிரியர்கள் அவர்களுக்கு நன்றிகளை தெரிவித்து கொண்டனர்

# விருதுநகர் கேவிஎஸ் பள்ளியின் பொருட்காட்சி திடலில் 4வது ஆண்டு புத்தக திருவிழா!

விருதுநகர்,நவ.17.

புத்தக திருவிழாவில் குழந்தைகள் தின விழாவையொட்டி அமைச்சர்கள் சாத்தூர் ராமச்சந்திரன், நிதியமைச்சர் தங்கம் தென்னரசு, ஆட்சியர் சுகபுத்ரா, காப்பக குழந்தைகளுடன் கேக் வெட்டி பரிசுகள் வழங்கி வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

அதன் சுற்றுச்சூழலை காக்க பொறுப்பு ஏற்கிறேன் காலநிலை மாற்றத் படிப்பிற்கான கையெழுத்து இயக்கத்தையும் தொடங்கி வைத்தனர். மேலும் மாவட்ட ஆட்சியர் சுகபுத்ரா இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டுள்ள எம்.பி எம்.எல்.ஏக்களுக்கு நினைவு பரிசு வழங்கினார்.

விருதுநகர் மாவட்டத்தின் பெருமைகளை வெளிப்படுத்தும் வகையில் வெம்பக்கோட்டை அகழாய்வு அரங்கு, வனத்துறையின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள அரங்குகள் என 110 அரங்குகள் இடம் பெற்றுள்ளன.

புத்தக திருவிழா இன்று தொடங்கி வரும் நவம்பர் 24ம் தேதி வரை 10 நாட்கள் நடைபெறுகிறது.

புத்தக திருவிழாவில் கலந்து கொண்டு பேசிய நிதியமைச்சர்தங்கம் தென்னரசு, சென்னையில் மட்டுமே நடத்தப்பட்டு வந்த புத்தக கண்காட்சி, தற்போது தமிழகம் முழுவதும் புத்தக கண்காட்சி நடைபெறுகிறது. ஒட்டு மொத்த சமுதாயத்தை வடிவமைக்க புத்தகம் முக்கியமானது. நதிகளின் பெயர்களில் புத்தக கண்காட்சிகள் நடத்தப்பட்டு வருகிறது.

விருதுநகர் மாவட்டத்தின் வரலாற்று விழுமியங்களான பெருமைக்களான வெம்பக்கோட்டை அகழாய்வு அரங்கு என பல்வேறு அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

விருதுநகர் மாவட்டத்தின் தொழில் வளங்களை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்ல புத்தொழில் நிறுவனங்கள் ஸ்டார்ட் அப் கம்பெனிகள்தொழில் முனைவோர்களுக்கும் ஒருங்கிணைக்கும் இணைப்பு பாலமாக புதிய வாய்ப்புகள் ஏற்படுத்தி கொடுக்கப்பட்டுள்ளது.

ஒரு மனிதனுக்கு மிகப் பெரிய ஆயுதமாக அறிவு தான் ஆயுதம் இருக்க முடியும். வடமொழி பழமொழி சமஸ்கிருத சுலோகமான புஸ்தக அஷ்டபூசனம் என்று. ஒருவனது கையிலே சிறந்த ஆபரணமாக இருப்பது அவனது கையிலே இருக்கக்கூடிய புத்தகமாக தான் இருக்க முடியும்.

விருதுநகர் மாவட்டம் கரிசல் பூமி நிறைந்த மாவட்டமாகும். நம் மாவட்டத்தை சேர்ந்தவர்கள் சகித்யா அகாடமி விருது பெற்று பெருமை சேர்த்துள்ளனர்.

பெண்கல்விக்கு வித்திட்ட மாவட்டம் விருதுநகராகும். ஆண்டாள்பாடிய நாலாயிரம் திவ்ய பிரபந்தம் சிறந்த எடுத்துக்காட்டாக அமையும் என தெரிவித்தார்.

அதனை தொடர்ந்து பேசிய, வருவாய்த்துறை அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன், நிதியமைச்சர்தங்கம் தென்னரசு அதிகமாக புத்தகம் வாசிப்பார். வளரும் இளம் தலைமுறையினர் புத்தக வாசிப்பு பழக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் நம் முதல்வர் ஸ்டாலின் மாவட்டம் தோறும் இதுபோன்ற நிகழ்ச்சிகளை நடத்த ஆணையிட்டுள்ளார்.

பொதுவாக புத்தகங்களை படிக்கின்ற நேரத்தில் மனிதனுக்கு அறிவுச் சிந்தனை இயற்கையாக வரும். புத்தகத்தை படிக்க படிக்க மனதில் கேள்விகள் எழும். எந்த கேள்விக்கு பதிலும் அந்த புத்தகத்திலேயே அவருக்கு கிடைக்கும். புத்தகம் படிப்பதன் மூலமாக அறிவுத்திறன் வளர்வது மட்டுமல்ல. நமக்கு முன்னே இருந்த உலகம் எப்படி இருந்தது. அரசர் காலத்தில் எப்படி இருந்தார்கள். அதற்கு முன்னதாக நம்முடைய முன்னோர்கள் எப்படி இருந்தார்கள், ஆங்கிலேயர் காலத்தில் நம்முடைய நாடு எப்படி இருந்தது. இப்போது நமது நாடு எப்படி இருக்கிறது. எதிர்காலத்தில் எப்படி இருக்க வேண்டும் என்பதை எல்லாம் எடுத்து சொல்கின்ற புத்தக கண்காட்சி தான். நாம் பார்க்கிறோம் என தெரிவித்தார்.

### உதயேந்திரம் பேரூராட்சியில்
# வாக்களர் பட்டியல் சிறப்பு தீவிர சீர்திருத்த பணிகள் ஆய்வு!



வாணியம்பாடி நவ.17.

வாணியம்பாடி உதயேந்திரம் பேரூராட்சி யில் வாக்காளர் பட்டியல் தீவிர சீர் திருத்த பணிகள் ஆய்வு செய்யப் பட்டது. கழகத்தின் பூத் லெவல்

கழக நிர்வாகிகளுக்கு தேவையான ஆலோசனைகளை வாணியம்பாடி சட்டமன்ற தேர்தல் பொறுப்பாளர நூருல்லா, அட்வகேட் பிரபாகரன் ஆலோசனைகளை வழங்கினர்.

இக்கூட்டத்தில் தேர்தல் பணிக்குழு பொறுப்பாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். இத்தக வலை உதயேந்திரம் பேரூராட்சி முன்னாள் தலைவரும், பேரூர் கழக செயலாளருமான ஆ.செல்வராஜ் தெரிவித்துள்ளார்.

# ரூ.1,000 க்கும் குறைவான தயாரிப்புகளுக்கு பூஜ்ஜிய கமிஷன்!
## Flipkart புதிய விற்பனையாளர் மாதிரி அறிமுகம்!!

சென்னை நவ.17.



இந்தியாவின் முன்னணி மின்வணிக தளமான Flipkart, ரூ.1,000 க்கும் குறைவான அனைத்து தயாரிப்புகளுக்கும் பூஜ்ஜியம் கமிஷன் மாதிரியை அறிமுகப்படுத்தியுள்ளது. ஆன்லைன் விற்பனையை எளிதாக்கவும், MSME விற்பனையாளர்களுக்கு அதிக வாய்ப்புகளை உருவாக்கவும் உருவாக்கப்பட்ட இந்த மாதிரி, செலவு கட்டமைப்பை எளிமைப்படுத்தி, போட்டி விலை நிர்ணயத்தை ஊக்குவிக்கிறது. இதன் ஒரு பகுதியாக, விலைப் பெருமதியைப் பொரு ட்படுத்தாமல் Shopsy தளத்திலுள்ள அனைத்து தயாரிப்புகளுக்கும் பூஜ்ஜிய கமிஷன்நீட்டிக்கப்பட்டுள்ளது. இந்த மாற்றம், MSMEகள் தங்களது செயல்பாட்டு செலவினங்களில் 30% வரை குறைப்பு பெற உதவும் என Flipkart தெரிவித்துள்ளது. முன்னறிவிப்பு தேவை கணிப்பு, தானியங்கி வரிசைப்படுத்தல், AI அடிப்படையிலான வழித்தட மேம்பாடு போன்ற முன்னேற்றமான தொழில்நுட்பங்களால் இயக்கப்படும் Flipkart விநியோகச் சங்கிலி, விற்பனையாளர்களுக்கு அதிக நம்பகத்தன்மை மற்றும் செயல்திறன் வழங்குகிறது. பாதுகாப்பான கொடுப்பனவுகள் மற்றும் 500 மில்லியனுக்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்களின் அணுகல் ஆகியனவும் விற்பனையாளர்களுக்கு கூடுதல் பலன்களாக அமைகின்றன. இந்த அறிவிப்பைப் பற்றி Flipkart இன் மூத்த துணைத் தலைவர் மற்றும் சந்தைப் பிரிவு தலைவர் சகாய்த் சவுத்ரி கூறுகையில், “இந்தியாவின் MSME துறைக்கு நுழைவுத் தடைகளை நீக்குவதில் பூஜ்ஜியம் கமிஷன் மாதிரி ஒரு முக்கியமான முன்னேற்றமாகும். ரூ.1,000 க்கும் குறைவான தயாரிப்புகள் மற்றும் Shopsyயில் உள்ள அனைத்து தயாரிப்புகளுக்கும் கமிஷனை நீக்குவதன் மூலம், அதிக பிராந்திய மற்றும் வளர்ந்து வரும் பிராண்டுகள் டிஜிட்டல் பொருளாதாரத்தில் உற்சாகமாக பங்கேற்க வழிவகுக்கிறோம். இதன் மூலம் வாடிக்கையாளர்களுக்கும் மலிவு விலையில் அதிக தேர்வுகள் கிடைக்கும்” என்றார்.

### சிவகாசி அருகே
# வாக்குச்சாவடி நிலை முகவர்களுக்கான பயிற்சி முகாம்!
## அமைச்சர் கே.டி ராஜேந்திர பாலாஜி தலைமையில் நடைபெற்றது!!

விருதுநகர்,நவ.17.

திருத்தங்கல் பாலாஜி நகரில் உள்ள அதிமுக மாவட்ட தலைமை அலுவலகத்தில் முன்னாள் அமைச்சர் கே.டி ராஜேந்திர பாலாஜி தலைமையில் வாக்குச்சாவடி நிலை முகவர்களுக்கான பயிற்சி முகாம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பேசிய அதிமுக முன்னாள் அமைச்சர் கே.டி ராஜேந்திர பாலாஜி, கட்சியில் கருத்து வேறுபாடு தேவையில்லை. பாசப்பினை புள்ள கட்சி அதிமுக தான். பாசமான கட்சி அதிமுக. உறவுக்கு கைகொடுக்கும் கட்சி அதிமுக. விருதுநகர்மாவட்டத்தில் கே டி ராஜேந்திர பாலாஜி தான் போட்டுகிறார் என்று அனைவரும் பணியாற்றுங்கள். சென்ற நாடாளுமன்ற தேர்தலில் அதிமுக கூட்டணியில் போட்டியிட்ட தேமுதிக வேட்பாளராக மறைந்த விஜயகாந்த் மகன் விஜய பிரபாகரன் 2000 வாக்குகளில் வெற்றி பெற்றிருப்பார். 7000 வாக்குகள் பதிவாகவில்லை. முறையாக வாகனங்களை ஏற்பாடு செய்து வாக்களிக்க மக்களை அனுப்பி இருந்தால் வெற்றி பெற்றிருக்க முடியும். நாம் அதனை விட்டு விட்டோம். வாக்குகள் சரியாகப் பதிவாகவில்லை. முறையான வாகன வசதி இல்லாததால் மக்கள் வாக்களிக்க வர முடியவில்லை. நாமும் அதனை சரியாக கண்காணிக்கவில்லை. அதனால் தான் வெற்றி வாய்ப்பு எந்த இடத்தில் தவற விட்டோம். ஒரு லட்சம் ஓட்டு வித்தியாசத்தில் வெற்றி பெற்று விடலாம் என்ற மம்மதையில் இருந்து விட்டோம்.

அதுபோல் எப்போதும் இருக்கக் கூடாது என்பதற்கு நாடாளுமன்றத் தேர்தல் படிப்பினையை கற்றுக் கொடுத்துள்ளது. முறை யாக பணியாற்றி இருந்தால் விஜய பிரபாகரன் வெற்றி பெற்று விருதுநகர் எம்பி ஆக தேர்வாகி இருப்பார். எனவே அதிமுகவினர் வரும் சட்டமன்ற தேர்தலில் முழுமூச்சுடன் இணைந்து பணியாற்ற வேண்டுமென பூத் கமிட்டி நிர்வாகிகளுக்கு அறிவுரை வழங்கினார்.



தருமபுரி பழைய மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் குழந்தைகள் தினத்தை முன்னிட்டு மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகின் சார்பில் ”குழந்தைகளுக்கான நடை” (Walk for Children) என்ற மாபெரும் விழிப்புணர்வு பேரணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் ரெ.சதீஸ் கொடியசைத்து தொடங்கி வைத்தார். மேலும் கையெழுத்து இயக்கத்தை துவக்கி வைத்து குழந்தைகளுக்கான பாதுகாப்புதிஊறுதிமொழியினைமாவட்டஆட்சித்தலைவர்தலைமையில்எடுத்துக்கொள்ளப்பட்டது.

### போச்சம்பள்ளியில்
# நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட மருத்துவ முகாம்!
## தே.மதியழகன் எம்.எல்.ஏ குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார்!!



கிருஷ்ணகிரி நவ.17.

கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட மருத்துவ முகாம் சனிக்கிழமை நடைபெற்றது. முகாமில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும் பர்கூர் சட்டமன்ற உறுப்பினருமான மதியழகன் எம் எல் ஏ கலந்து கொண்டு குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்ட மருத்துவ முகாம் கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் சனிக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெற்றது. இம்மருத்துவ முகாமில் பொதுமக்களுக்கு தேவையான இரத்த பரிசோதனை, கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஸ்கேன் பரிசோதனை, XRay, ECG, ECHO, Ultra Sound, கண் பரிசோதனை மற்றும் மகப்பேறு மருத்துவம் போன்ற 17 வகையான சிறப்பு நிபுணர்களைக் கொண்டு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டது.

மேலும், இம்முகாமில் கலந்து கொண்ட பொது மக்கள் அனைவருக்கும்

முதலமைச்சர் காப்பீட்டு திட்ட அட்டை மாற்றுத்திறனாளிகளுக்கு மற்றும் தொழிலாளர்களுக்கு இலவசமாக அடையாள அட்டை வழங்கப்பட்டது. அனைத்து பொதுமக்களுக்கும் இலவசமாக உடல் பரிசோதனைகள் மற்றும் இருதய பரிசோதனை செய்யப்பட்டது.

இம்முகாமில் தொற்றா நோய், உயர் இரத்த அழுத்தம், கண் பார்வை பரிசோதனை, சிறுநீரக பரிசோதனை, இதய பரிசோதனை மற்றும் நரம்பியல் மருத்துவம், சித்த மருத்துவம், பெண்களுக்கான மார்பக புற்றுநோய் பரிசோதனை மேலும் பல் சிகிச்சை உட்பட 17 வகையான சிறப்பு மருத்துவர்கள் மூலம் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

முகாமில் மாவட்ட சுகாதார அலுவலர் ரமேஷ் குமார், மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலர் முருகேசன், வட்டார மருத்துவ அலுவலர்கள் சிவக்குமார், ரங்கசாமி, அன்பரசி, மாவட்ட பொருளாளர் கதிரவன்,

மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் இளையராஜா,

நெசவாளரணி மாவட்ட அமைப்பாளர் அம்மன் ராஜா, அமைப்பு சாரா ஓட்டுனர் அணி மாவட்டதுணைஅமைப்பாளர் அருள்குமார், இளைஞர்அணிமாவட்ட துணை அமைப்பாளர்கள் சரவணன் சாந்தமூர்த்தி, தாபா சங்கர், லயோலா ராஜசேகர், சத்தியமூர்த்தி, நாகோஜனஹல்லி பேரூராட்சி தலைவர் தம்பிதுரை, மாணவரணி துணை அமைப்பாளர் கௌதம், கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை மாவட்ட துணை அமைப்பாளர் கிரி மற்றும் மருத்துவர்கள் சுகாதார ஆய்வாளர்கள் கலந்து கொண்டனர்.

### நாட்றம்பள்ளி பகுதியில்
# பா.ஜ.க. மத்திய அரசு நலத்திட்டங்கள் பிரிவு - நிர்வாகிகள் அறிமுக கூட்டம்!



திருப்பத்தூர் நவ.17

திருப்பத்தூர் மாவட்டம் நாட்றம்பள்ளி பகுதியில், பாரதிய ஜனதா கட்சி மத்திய அரசு நலத்திட்டங்கள் பிரிவு சார்பில், வேலூர் பெருங்கோட்டம் மத்திய அரசு நலத்திட்டங்கள் பிரிவு நிர்வாகிகள் அறிமுக கூட்டம் தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

மேலும் நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட சென்னை மாநில தலைவர் ராஜா, மத்திய அரசு செயல்படுத்தி வரும் பல நலத்திட்டங்கள் குறித்து விரிவாக உரையாற்றினார். பின்பு மாநில செயலாளர் திருப்பத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த குருசேவ் கூட்டத்துக்கு தலைமை வகித்தார். மேலும் நிகழ்வில், திருவண்ணாமலை மாவட்ட வடக்கு மாநில செயலாளர் ஆரணி சைதை சங்கர் மாநில பொதுச் செயலாளர் கார்த்தியாயினி மாநில இணை அமைப்பாளர் லோகேந்திரன் திருப்பத்தூர் மாவட்ட தலைவர் தண்டாயுத பாணி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

29ஆம் தேதி மாநாடு நடைபெறும் என்பதால் அது குறித்து ஆலோசனையும் வழங்கினார்கள் மேலும் இந்த அறிமுக நிகழ்ச்சியில் ஏராளமான பாரதிய ஜனதா கட்சி நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் பங்கேற்று சிறப்பித்தனர்.

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002.
Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH

## கிருஷ்ணகிரி மாவட்டம்

# சூளகிரியில் கந்து வட்டி மூலம் இரண்டு கடைகளை பூட்டி அபகரிப்பு!

## பெண் குடும்பத்துடன் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் புகார் !!



கிருஷ்ணகிரி,நவ.17

கிருஷ்ணகிரி மாவட்டம் சூளகிரியை சேர்ந்தவர் ஜோதி. இவர் சூளகிரி பேரிகை சாலையில் பேன்சி ஸ்டோர் மற்றும் புட்வேர் கடையை நடத்தி வருகிறார்

இரண்டு அடுக்குமாடியாக இந்த கடைகள் இயங்கி வருகிறது, இந்த நிலையில் தனது குடும்ப கஷ்டத்திற்காக ஜோதி அதேப் பகுதியில் துணிக் கடை நடத்தி வரும் மஞ்சுளா என்பவரிடம் ரூ10 லட்சம் ரூபாய், பத்து ரூபாய் வட்டிக்கு வாங்கியுள்ளார்,

இதற்கு வட்டியாக மாதம் தோறும் பணமாக ரூ 1 லட்சம் ரூபாய் கட்டி வந்துள்ளார். இதுவரை அசல் மற்றும் வட்டி என 60 லட்சம் ரூபாய் திரும்பி கொடுத்துள்ள போதும் கடைகளையும் அபகரித்துக் கொண்டு கடைகளை தர மறுத்ததோடு அடியார்களை கொண்டு மிரட்டி வருவதால் எங்களால் உயிர்வாழ முடியாத நிலை உள்ளதாக கூறி பாதிக்கப்பட்ட ஜோதி தனது குடும்பத்துடன் கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் புகார் மனுவினைக் கொடுத்தார்.

மேலும் இந்த மனுவில் சூளகிரியில் வசித்து வருகிறேன் குடும்ப சூழ்நிலையாக கடையின் அருகில் உள்ள மஞ்சளா என்பவரிடம் ரூ.10 லட்சம் கடன் வாங்கினேன்,

அதற்கு வட்டியாக மாதம் தோறும் ரூபாய் 1 லட்சம் விதம் அசல் பணத்துடன் 60 லட்சம் வரை அபராத வட்டியுடன் கந்து வட்டியாக இது வரை 60 லட்சம் வாங்கி உள்ளனர். தற்போது எங்களது இரு கடைகளையும் பூட்டி அபகரித்துக் கொண்டனர் இது குறித்து கேட்டால் மஞ்சுளா அடியாள்கள் மூலம் கொலை மிரட்டல் விடுத்து வருகிறார். கடையை அபகரித்து கொண்டதால் வாழ்வாதாரம் இன்றி அவதிப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்,

மேலும் இது தொடர்பாக காலல் நிலையத்தில் புகார் கொடுத்தும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காதால் மாவட்ட ஆட்சியரிடம் புகார் மனு கொடுக்க வந்துள்ளதாக தெரிவித்தார். இது தொடர்பாக மாவட்ட ஆட்சியர் உரிய நடவடிக்கை எடுத்து அபகரித்து கொண்ட இரண்டு கடைகளையும் மீட்டுத்தர உரிய நடவடிக்கை எடுத்து எங்களை காப்பாற்ற வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

## பல லட்சம் மோசடி புகார்:

# மதுக்கரை தர்மலிங்கேஸ்வரர் கோவில் வாழ்நாள் அறங்காவலர் டிஸ்மிஸ்!

## இந்து சமய அறநிலையத்துறை அதிரடி நடவடிக்கை!!

கோவை, நவ.17

கோவை மாவட்டம் மதுக்கரை மரப்பாலம் அருகே அமைந்துள்ள பல நூற்றாண்டுகள் பழமையான தர்மலிங்கேஸ்வரர் கோவிலில் கடந்த பல ஆண்டுகளாக நடந்ததாக கூறப்படும் பெரிய அளவிலான பொருளாதார முறைகேடுகள்,ஆவண மோசடிகள் மற்றும் தன்னிச்சை நிர்வாகம் தொடர்பான



புகார்களுக்கு, உயர் நீதிமன்றம் உத்தரவிட்ட விசாரணை முடிவடைந்து அதிரடி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கோவில் வாழ்நாள் அறங்காவலராக இருந்த கிருஷ்ணசாமி மற்றும் அரசு போக்குவரத்து துறையில் பஸ் ஓட்டுநராக பணிபுரிந்தும் துறை அனுமதி இன்றி அறங்காவலராக செயல்பட்ட திருமூர்த்தி உள்ளிட்ட பலர் மீது மோசடி,கணக்கு மறைவு,அனுமதி இல்லாத கட்டுமானம்,கோவில் நிலங்களை மறைத்து வைத்தல், நன்கொடை கணக்கில் காட்டாமை உள்ளிட்ட பல புகார்கள் எழுந்த நிலையில் இந்த விவகாரம் தொடர்பாக தொழிலதிபர் சி.கே கண்ணன் 2023ம் ஆண்டு உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர நீதிமன்றம் இந்து சமய அறநிலையத்துறை அதிகாரிகள் குழுவை நியமித்து விசாரணை நடத்த உத்தரவிட்டது.

அதிகாரிகள் குழுவின் விசாரணையில்,

அனுமதி இன்றி அறங்காவலர்கள் நியமி த்தல்,27 இளைப்பாறு மண்டபங்கள் கட்டப்பட்டும் எந்த வரவுசெலவு பதிவும் இல்லாதது

கோவில் பெயரில் வங்கி கணக்கே இல்லாமல் நன்கொடைகள் மறைக்கப்பட்டு மோசடி நடந்தது மதுக்கரையில் உள்ள ரூ.125 கோடி மதிப்பிலான 28.15 ஏக்கர் கோவில் நிலம் பதிவேடு இன்றி மறைக்கப்பட்டது

பவுர்ணமி,பிரதோஷம் உள்ளிட்ட விசேஷ நாட்களில் இடைக்கால உண்டியல் வருவாய் கணக்கில் காட்டப்படாதது.தங்கம்,வெள்ளி காணிக்கை பொருட்கள்பதிவேடு செய்யப்படாதது உள்ளிட்ட 29 குற்றச்சாட்டுகளும் ஆதாரத்துடன் நிரூபிக்கப்பட்டன.

இதற்கிடையில் கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டுமே முறையான கணக்கெடுப்பின்மூலம்கோவிலுக்குரூ.70,45,370 வருவாய் வந்துள்ளது. தற்போது கோவில் பெயரில் ரூ.12 லட்சம் வங்கி டெபாசிட்டாகவும் உள்ளது.

அனைத்துப் புகா ர்களும் உண்மை என நிரூபணமாகியதை அடுத்து இந்து சமய அறநிலைய துறை இணை ஆணையர் ரமேஷ்,கிருஷ்ணசாமியை வாழ்நாள் அறங்காவலர் பதவியிலிருந்து நிரந்தரமாக நீக்கும் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

மேலும் கடந்த 30 ஆண்டுகளில் கோவிலில் நடந்ததாகக் கூறப்படும் மோசடி பணத்தை மீட்டு கோவிலுக்கே ஒப்படைக்க வேண்டும் என்று சிவபக்தர்கள் தமிழக அரசிடம் வலியுறுத்தி வருகின்றனர்.

# சரக்கு வாகனத்தில் ஆபத்தான பயணம்!

## போலீசார் நடவடிக்கை எடுக்க கோரிக்கை!!

சிவகாசி, நவ.17

சிவகாசி யில் சரக்கு வாகனங்களில் ஆட்கள் ஏற்றி செல்வது அதிகரித்து வருகின்றது. தமிழகத்தில் சரக்கு வாகனங்கள், லாரிகளில் ஆட்களை ஏற்றிச் செல்லக் கூடாது. ஆட்டோ, பஸ்களில் அதிக பயணிகளை ஏற்றிச் செல்லக் கூடாது என, தமிழக அரசு தடை விதித்துள்ளது. ஆனால், திருமணம், காது குத்தல் மற்றும் வேலைக்கு தொழிலாளர்களை அழைத்துச் செல்ல சரக்கு லாரி, சரக்கு வாகனங்கள் பயன்படுத்தப்படுவது, தொடர்கிறது. சிவகாசியில், சரக்கு ஆட்டோக்களில் அதிகளவு பயணிகளை, ஏற்றிச் செல்கின்றனர். ஆனால், போக்குவரத்து அதிகாரிகள், போலீசார் இவற்றை கண்டு கொள்வதில்லை. அரசின் உத்தரவு காற்றில் பறப்பதால், அடிக்கடி விபத்து ஏற்படுகின்றது.

இதுபோன்ற, அசம்பாவிதசம்பவங்களைதடுக்க, அர சின் உத்தரவை மதிக்காத. சரக்கு

வாகன உரிமையா ளர்கள் மீதுபோக்குவரத்து போலீ சார் மற்றும் வட்டார போக்குவரத்து அதிகாரி கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என சமூக ஆர்வலர்கள் வலியுறுத்தி வருகின்றனர். இது குறித்து சமூக ஆர்வலர்கள் கூறுகை யில், "வாடகை குறைவு, அதிக எண்ணிக்கையில் பயணம் செய்யலாம்என்ற எண்ணத்தில் சரக்கு வாக னங்களில் கிராம மக்கள் அழைத்து செல்லப்ப டுகின்றனர். இவ்வாறு பயணம் செய்யும்போது விபத்து ஏற்பட்டால்காப்பீடு கிடைக்காது என்பதை அறியாமல் உள்ளனர்.இது தொடர்பாக சம்பந்தப் பட்ட அதிகாரிகள் நடவ டிக்கை எடுக்க வேண்டும்" என்றனர்.

## பெனாங் இன்டர்நேஷனல் 2வது பாலம்:

# சாலிடாரிட்டி ரைட் 2026க்கு தயாராகும் சென்னை சைக்கிள் வீரர்கள்!



சென்னை நவ.17

விசிட் மலேசியா வருடம் 2026 (VMY2026) பிரச்சாரத்தை முன்னிட்டு, டூரிசம் மலேசியா சென்னை மற்றும் டயர் சக்தி டிராவல்ஸ் & டூர்ஸ் டிரான்ஸ்வால் இன்டர்நேஷனல் பிரைவேட் லிமிடெட்ஹாலிடே ஸ்டார் டூர்ஸ் & டிராவல்ஸ்பெனாங்க் கன்வென்ஷன் & எக்ஸிபிஷன் ப்யூரோ ப்ரோபைக்கர்ஸ் (ProBikers)மதுரை டிராவல் சர்வீஸ் (பி) லிமிடெட் ரயிட் சென்னை ப்ளை & ரயிட் ஆகிய நிறுவனங்களின் கூட்டிணைப்பு, பினாங்கில் நடைபெற உள்ள பேங்க் இன்டர்நேஷனல் இரண்டாம் பாலம் சாலிடாரிட்டி ரைட் 2026க்கு ஆதரவாக சென்னை நகரில் சிறப்பு சமூக சைக்கிள் பயணம் ஏற்பாடு செய்யப்பட்டது. காலை 5.45 மணிக்கு நுங்கம்பாக்கம் ல் உள்ள பாரிஸ் ஹோட்டல் இருந்து துவங்கிய இந்தப் பயணம் பாரிஸ் ஹோட்டல் மெரினா லைட் ஹவுஸ் யூடர்ன் பாரிஸ் ஹோட்டல் என்ற வழித்தடத்தை சுற்றி நடைபெற்றது. சைக்கிள் ஆர்வலர்கள், பயண நிறுவனங்கள் மற்றும் உடற்தகுதி குழுக்கள் பங்கேற்ற இந்த நிகழ்வு, இந்திய சைக்கிள் பயணிகளின் சர்வதேச விளையாட்டுப் பயணங்களில் அதிகரித்து வரும் ஆர்வத்தை வெளிப்படுத்தியது. நிகழ்வை பற்றி டூரிசம் மலேசியா சென்னை இயக்குநர் திரு. ஹிஷமுத்தீன் முஸ்தபா கூறுகையில், "இந்த சமூக சைக்கிள் பயணம், விளையாட்டுப் பயணத்தால் மக்களுக்கு இடையே நெருக்கத்தை வலுப்படுத்தும் ஒரு முக்கிய செயல்பாடாகும். Chennai சைக்கிள் சமூகத்தின் பங்கேற்பு பினாங்கில் நடைபெறும் Solidarity Rideக்கு பெரிய ஊக்கமாக உள்ளது. Visit Malaysia Year 2026 நெருங்கும் நிலையில், இந்தியப் பயணிகளை வரவேற்க மலேசியா முழுமையாகத் தயாராக உள்ளது," என்றார். மேலும், தென் இந்தியாவில் உள்ள சைக்கிள் சமூகங்களுடன் தொடர்ந்து இணைந்து, "பெனாங் சர்வதேச இரண்டாவது பாலம் ஒற்றுமை பெருவிழா 2026" மற்றும் பிற விளையாட்டு சுற்றுலா முயற்சிகளில் அதிக பங்கேற்பை ஊக்குவிக்கும் திட்டத்தை Tourism Malaysia Chennai அறிவித்துள்ளது.

## அரசு மகளிர் பள்ளியில்

# குழந்தைகள் தின விழாவில் 978 மாணவிகளுக்கு விருந்து கொடுத்து அசத்திய ஆசிரியர்கள்!

புதுக்கோட்டை நவ.17

புதுக்கோட்டை அருகே அரசு மகளிர் மேல்நிலைப் பள் ளியில் குழந்தைகள் தின விழாபள்ளியில் கொண்டாடப்பட்டது. விழாவில் ஆசிரியர்கள் தாங் கள் சொந்த செலவில் 978 மாணவிகளுக்கு வெஜி டபிள் பிரியாணி விருந்து கொடுத்து கொண்டாடி மாணவிகளும் பாடல் பாடி அசத்தினார்கள். புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அருகே உள்ள கீரமங்கலம் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் குழந்தைகள் தின விழா நடந்தது விழாவிற்கு பள்ளியின் தலைமை ஆசிரியை வள்ளிநாயகி தலைமை நடைபெற்றது. பேரூராட்சி தலைவர் சிவக்குமார் பள்ளி தலைமைஆசிரியர்கள்பள்ளி மேலாண்மை குழு,பெற்றோர் ஆசிரியர்கழகம் பள்ளி மாணவிகள் முன்னிலை யில் விழா நடந்தது. பண்டித ஜவகர்லால் நேரு பிறந்த நவ. 14ம் தேதி குழந்தைகள் தின விழாவாக நாடு முழுவதும் கொ ண்டாடப்பட்டு வருகிறது. பொதுவாக குழந்தைகள் தின விழாவில் தாய் தந் தையர்கள் தாங்கள் குழந்தைகளுக்கு தாங்கள் இனிப்புகள் மற்றும் பூங்கொத்துகள் கொடுத்து வாழ் த்து சொல்வது வழக்கமான ஒன்று. விழாவில் மாணவிகள் பாடல் நிகழ்ச்சியை நடத்தி னார்கள். பிறகு மாணவிகளை பள்ளி வளாகத்தில் வரிசையாக அமர வைக்கப்பட்டு வாழை இலையி ல் உணவு போட்டு பள்ளி ஆசிரியர்களின் சொந்த செலவில் தயாரிக்கப்பட்ட வெஜிடபிள் பிரியாணி யை ஆசிரியர்கள் மாணவிகளுக்கு பருமாறினா ர்கள். இதேபோல் அனைத்து கல்வி நிறுவனங்களிலும் மாணவ மாணவிகளுக்குகுழந்தைகள் தின சிற ப்பு நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. இதையடுத்து குழந்தைகள்தினவிழா என்பது பாராட்டுவதும் குழந்தைகளுக்கு மகிழ்வுற்றுவதும் இன்றளவும் தொடர் ந்து நடந்து கொண்டுதான் வருகிறது.

விழாவில் ஆசிரியர்கள் மாணவிகள்,பாடல், நடனம் நிகழ்ச்சிகள் நடத்தியதை விழா குழுவினர்கள் கண்டு ரசித்தும், மாணவிகள் விழாவில் உற்சாக த்துடன் கொண்டாடினார்கள். விழாவில் பள்ளி மேலாண்மை குழு மற்றும் பெற் றோர் அரசிரியர் கழகம் மற்றும் உறுப்பினர்கள் ஆசிரியர்கள் அலுவலக பணியாளர்கள் மாணவிக ள் மற்றும் பலர் கலந்து கொண்டனர் .

# கசல் நாயக்கன்பட்டியில் குழந்தைகள் தின விழா!

திருப்பத்தூர் நவ.17

திருப்பத்தூர் அடுத்த கசல் நாயக்கன்பட்டி பகுதியில் அமைந்துள்ள அரசு ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட



மாணவ மாணவிகள் பயின்று வருகின்றனர். இதில் குழந்தைகள் தின விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.

அனைவருக்கும் இனிப்புகள் வழங்கி தலைமை ஆசிரியர் குழந்தைகள் இவ்வாறு வளர வேண்டும் இவ்வாறு இருக்க வேண்டும் ஒழுக்கமாக இருக்க வேண்டும் எல்லோரிடமும் அன்பாகவும் நட்பாகவும் பழக வேண்டும் படிப்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என பல்வேறு அறிவுரைகளை கூறி வாழ்த்திப் பேசினார். மேள தாளங்களுடன் பள்ளி வளாகத்துக்குள் அனைத்து பள்ளி மாணவ மாணவிகள் குழந்தைகளை தின விழாவுக்கு அழைத்து வந்து அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டது.

## ஆலங்குடி ஒருங்கி ணைந்த பள்ளிக்கல்வியின் சார்பில் நடைபெற்று வரும்

# ஆதார் மையத்தை இணை இயக்குநர் பொன்னையா பார்வையிட்டு ஆய்வு!



புதுக்கோட்டை, நவ,17

புதுக்கோட்டை மாவட்டத்தில் பள்ளிகளில் பயிலும் மாணவ ர்களில் பயோமெட்ரிக் பதிவு செய்யாமல் அதிக எண் ணிக் கை உள்ள மாணவர்கள் பயிலும் பள்ளிகளில் புதுக்கோட்டை மாவட்ட ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியின் சார்பில் ஆதார் மையம் ஏற்படுத்தப்பட்டு அதன் வாயிலாக பயோ மெட்ரிக் பதிவு செய்யாத மாணவர்களுக்கு பதிவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆலங்குடி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் புதுக்கோட்டை மாவட்ட ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வியின் சார்பில் ஆதார் மையம் செயல்பட்டு வருகிறது. இந்த மையத்தினை இணை இயக்குநர் ( தொடக்கக் கல்வி அரசு உதவி பெறும் பள்ளிகள்) பொன்னையா எவ்வித முன் அறிவிப்பும் இன்றி பார்வையிட்டு ஆய்வு செய்து கூறியதா வது,

புதுக்கோட்டை மாவட்டத்தில் பயிலும் மொத்தமுள்ள மாண வர்களில் இதுவரை 254290 மாணவர்களுக்கு ஆதார் எடுக்கப்பட்டுள்ளது.

இன்னும் பயோ மெட்ரிக் பதிவு செய்யாத மாணவர்களை உட னடியாக பதிவு செய்து கல்வி உதவித்தொகை பெறுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குறிப்பாக புதுக்கோட்டை மாவட்டத்தில் 15 வயதிற்கு மேல் பயோ மெட்ரிக் பதிவு செய்யாமல் உள்ள 10880 மாணவர்கள் மீது தனிக்கவனம் செலுத்தி உடனடியாக பயோ மெட்ரிக் பதிவு செய்வதை உறுதி செய்திட வேண்டும். பிற்ப டுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்த ப்பட்ட மாணவர்களின் கல்வி உதவித்தொகைக்காக ஆதாரை பயன்படுத்தி மாணவர்களின் அடையாளம் மற்றும் முகவரியை மின்னணு முறையில் ( இ.கே.ஒய் சி) சரி பார்த்தலை விரைந்து செய்திட வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

மேலும் ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வியின் சார்பில் பள்ளி யில் நடைபெற்று வரும் ஆதார் மையத்தில் பயோ மெட்ரிக் மேற்கொண்ட மாணவர்களுக்கு அதற்கான சான்றிதழை சார்ந்த மாணவர்களுக்கு வழங்கினார்இந்த நிகழ்ச்சியில் பள்ளியின் தலைமையாசிரியர் தியாக ராஜன், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வியின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ரெகுநாத துரை, பள்ளி ஆசிரியர்கள், மாணவ ர்கள், கல்வி மேலாண்மைக்குழு தலைவர் மற்றும் பெற்றோர் கள் கலந்துகொண்டனர்.



கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் அடுத்த ஆவத்துவாடி ஊராட்சி உட்பட்ட சுண்டக்கா பட்டி முருகர் கோவில் அருகில் கட்டி முடிக்கப்பட்ட ஐயப்பன் கோவில் மூன்றாம் ஆண்டு வருட அபிஷேக பூஜைக்கு தென்பெண்ணை ஆற்றில் இருந்து கங்கா பூசை முடித்து தீர்த்த கலசம்புறப்பட்டு ஏராளமான பெண்கள் தீர்த்தக் குழுவில் எடுத்து கோவில் வந்தடைந்தனர் இதைத்தொடர்ந்து 16ஆம் தேதி கும்பாபிஷேக விழா நடைபெறுகிறது

## புதுக்கோட்டை அருகே

# ரூ.4 லட்சம் காசோலை மோசடி வழக்கில் தொடர்புடைய நபருக்கு 6 மாதம் சிறை!

## புதுக்கோட்டை நீதித்துறை நடுவர் நீதிமன்றம் உத்தரவு!!

புதுக்கோட்டை நவ.17

புதுக்கோட்டை அருகே 4லட்சம்ரூபாய்காசோலை மோசடி வழக் கில் தொடர்புடைய நபருக்கு 6 மாத கால சிறை தண்டனை யும் புகார் தரருக்கு வழக்கில் கொடுக்க வேண்டிய 4 லட்சம் ரூபாயையும், 2 மாத காலத்திற்குள் இழப்பீடாக கொடுக்க புதுக்கோட்டை நீதித்துறை நடுவர் நீதிமன்றம் நேற்று முன்தி னம் உத்தரவு.

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அருகே உள்ள நடுப்பட்டி கிராமத்தைச் சேர்ந்தவர் பிரதீபா (26). இவரது கணவர் செல்வம்.

செல்வமும் ஆலங்குடி அருகே உள்ள மேல பாச்சிக்கோட்டைகிராமத்தைச் சேர்ந்த சக்திவேல் (35) என்பவரும் 6 ஆண் டுகளாக குடும்ப நண்பர்களாக பழகி வந்துள்ளனர்.

இந்நிலையில் தான் சக்திவேல் ஆலங்குடி பகுதியில் பெரிய அளவிலான ஹோட்டல் தொடங்கப் போவதாகவும் அதற்காக முதலீடு தேவைப்படுவதாகவும் வங்கியில் கடன் கேட்டு உள் ள நிலையில் வங்கி கடன் தாமதமாகி வருவதால் 4 லட்சம் ரூபாயை செல்வத்திடம் கேட்டுள்ளார்.

அவர் கொடுக்கும் தொகையை 2 மாத காலத்திற்குள் திருப்பி தந்து விடுவதாக உத்தரவாதமும் சக்திவேல் அளித்துள்ளார்.

இதனை நம்பிய செல்வம் கடந்த 2020ம் ஆண்டு நவம்பர் மாத ம் 13ம் தேதி 4 லட்சம் ரூபாயை சக்திவேலுக்கு வழங்கியுள்ள



ள்ளார்.

அதற்காக சக்திவேல் அன்றைய தினமே 2 மாதத்தில் பணம் தந்து விடுவேன் என்று கூறி அன்றைய தினத்திலிருந்து 2. மாதம் கழித்து அதாவது 2021 ஜனவரி 13ம் தேதியிட்ட அவரது காசோலையை செல்வத்தின் மனைவி பிரதீபா பெயரில் வழ ங்கி நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து சக்திவேல் கொடுத்த காசோலையை செல்வத்தின் மனைவி பிரதீபா அவரது வங்கி கணக்கில் செலுத்தியுள்ளார். அப்போது சக்திவேல் வங்கி கணக்கில் பணம் இல்லாமல் அந்த காசோலை ரிட்டனாகி உள்ளது.

இதனைத் தொடர்ந்து பிரதீபா மற்றும் செல்வம் ஆகியோர் சக்திவேலை அணுகி கேட்டபோது அவர் முறையாக பதில் சொல்லாததால் இது குறித்து செல்வத்தின் மனைவி பிரதீபா புதுக்கோட்டை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார்.

மேலும் இந்த வழக்கிற்கான அனைத்து ஆதாரங்களையும் பிரதீபா நீதிமன்றத்தில் சமர்ப்பித்த நிலையில் நேற்று முன்தினம் இந்த வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டது.

அதில் 4 லட்சம் ரூபாய் பெற்றுக்கொண்டு அதனை திருப்பி தராமல் அதற்காக காசோலை வழங்கி அந்த காசோலையும் வங்கியில் ரிட்டன் ஆனதால் செக்மோசடி வழக்காக எடுத்துக் கொள்ளப்பட்டு சக்திவேலுக்கு 6. மாதகாலம் சிறை தண்டனையும் இந்த வழக்கில் புகார் தாரரான பிரதீபாவுக்கு வழங்க வேண் டிய 4 லட்சம் ரூபாயையும் இழப்பீடாக 2 மாதங்களுக்குள் வழ ங்க வேண்டும் என நீதிபதி பாரதி உத்தரவிட்டார்.

மேலும் 4 லட்சம் ரூபாயை கட்ட தவறினால் மேலும் ஒரு மாதம் சிறை தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

# மாநில அளவில் விளையாட்டு போட்டியில் பங்கேற்கும் மாணவர்களை பாராட்டி பொதுமக்கள் பதாகை!




கிருஷ்ணகிரி, நவ.17

அரசம்பட்டி முத்தமிழ் அரசு மேல்நிலைபள்ளி மாணவர்கள் மாநில மற்றும் தேசிய அளவில் பங்கெடுக்க செல்லும் மாணவர்களை பாராட்டி கிராம மக்கள் ஊர் பொது இடங்களில் பதாகை வைத்து நன்றி கூறினர்.

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டணம் அடுத்த அரசம்பட்டி முத்தமிழ் அரச மேல்நிலைப் பள்ளி குழந்தைகள் தின விழாவை முன்னிட்டு மாநில மற்றும் தேசிய அளவில் விளையாட்டு போட்டியில் பங்கெடுக்கும் மாணவர்களை

பாராட்டி வாழ்த்துக்கள் கூறிய முன்னாள் மாணவர்கள் கூட்டமைப்பின் சார்பாக பள்ளியிலும் ஊர் பொது இடத்திலும் பதாகைகள் வைத்து மாணவர்களுக்கு வாழ்த்து கூறினார்கள் முன்னாள் மாணவர்கள் கூட்டமைப்புக்கு பள்ளியின் சார்பாக நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

# ஜோலார்பேட்டை ஒன்றியத்தில் நலன் காக்கும் ஸ்டாலின் திட்டம்!
## கலெக்டர், எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தனர்!!



திருப்பத்தூர் நவ.17

திருப்பத்தூர் அடுத்த ஜோலார்பேட்டை ஒன்றியத்துக்குட்பட்ட நகராட்சி நடுநிலைப் பள்ளியில் நலன் காக்கும் ஸ்டாலின் திட்டம் நடைபெற்றது. மருத்துவ முகாமில், மாவட்ட ஆட்சியர் க. சிவ சௌந்தரவல்லி ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் க.தேவராஜ்நிகழ்ச்சியை தொடங்கி வைத்து பார்வையிட்டனர். மேலும்,இந்தநிகழ்ச்சியில் ஜோலார்பேட்டை நகர மன்ற தலைவி காவியா விக்டர், மருத்துவ இணை இயக்குனர் ஞானம் மீனாட்சி, மாவட்ட மருத்துவ அலுவலர் வினோத் குமார், ஜோலார்பேட்டை ஒன்றிய செயலாளர் அன்பழகன், ஜோலார்பேட்டை நகர செயலாளர்,

இந்த மருத்துவ முகாமில் முதலமைச்சர் மருத்துவ காப்பீட்டு அட்டை மற்றும் மார்பக புற்றுநோய் தோல் நோய் சர்க்கரை வியாதி உட்பட பல்வேறு நோய்களுக்கு பரிசோதனை செய்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் பெண்கள் மேல்நிலைப்பள்ளி சேர்ந்த 11 ம் வகுப்பு பயிலும் 367 மாணவ மாணவியர்களுக்கு ரூ. 17 இலட்சத்து 67 ஆயிரத்து 920 மதிப்பிலான மிதிவண்டிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.தினேஷ் குமார் பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன் ஆகியோர் வழங்கினார்கள். உடன் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அலுவலர் பத்மலதா, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் இரா.மதன் குமார், பர்கூர் பேரூராட்சி தலைவர் சந்தோஷ் குமார் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் முதல் மாவட்ட விளையாட்டு அரங்கம் வரை 14ஆவது ஆடவர் ஹாக்கி இளையோர் உலகக் கோப்பை போட்டிக்கான வெற்றிக் கோப்பை சுற்றுப்பயணத்தை தொடங்கி வைத்தார். மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் ,அறங்காவலர் குழுத் தலைவர் ருக்மணி பழனிவேல்ராஜன் ஆகியோர் உடன் உள்ளனர்.

# அழுகிய நிலையில் ஆண் சடலம் மீட்பு!

சிவகாசி, நவ. 17

சிவகாசிசித்துராஜபு ரம் சாலையில் தனியார் திருமண மண்டபத்தின் அருகே மக்கள் நடமாட் டம் இல்லாத பகுதியில் நேற்று கடும் துர்நாற்றம் வீசியது. இது குறித்து அந் தபகுதி மக்கள் சிவகாசி டவுன் போலீசிற்கு தகவல் தெரி வித்தனர். அதன்பெயரில் இன்ஸ்பெக்டர் செல்வகுமார் மற்றும் போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று பார்வையிட்டனர். அப்போது அங்கு தூக்கில் தொங்கிய நிலையில் அழுகிய நிலையில் ஆண் பிரேதம் இருந்தது. இதனால் அதிர்ச்சி அடைந்த போலீசார் பிரே தத்தை கைப்பற்றி விருதுநகர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். தொடர்ந்து போலீசார் நடத்திய விசாரணையில், அழுகிய நிலையில் இறந்து கிடந்தவர் விருதுநகர் அருகே வடமலை குறிச்சியை சேர்ந்த கட்டிட தொழிலாளி முருகன் (எ) அந்தோணி (37) என்பதுதெரி ய வந்தது. இவருக்கு திருமணம் ஆன நிலையில் கடந்த சில வருடங்களாக மனைவியைப் பிரிந்து வாழ்ந்துவந்ததாக கூறப்ப டுகிறது. கடந்த மாதம் 14ம் தேதி வீட்டை விட்டு வெளியே சென்றவர் மீண்டும் திரும்பவில்லை. இந்நிலையில் சிவகாசி யில் தற்கொலை செய்து கொண்டதாக கூறப்படு கிறது. ஒரு மாதம் கழித்து அவர் இறந்த தகவல் குடும் பத்திற்கு போலீசார் தெரி வித்தனர். இந்த சம்பவம் சிவகாசியில் பெரும் பரப ரப்பை ஏற்படுத்தியது.

## ஸ்ரீவில்லிபுத்தூரில்
# ஆண்டாள் பிறந்த நந்தவனம் ரூ.25 லட்சம் செலவில் புதுப்பிப்பு!



ஸ்ரீவில்லிபுத்தூர் நவ.17

108 வைஷ்ணவ தலங்களில் முதன்மையானது ஸ்ரீ ஆண்டாள் திருக்கோயில் ஆகும் இந்த கோயிலுக்கு தினமும் தமிழக முழுவதும் மட்டுமின்றி உலகம் முழுவதும் இருந்தும் பக்தர்கள் சாமி தரிசனம் செய்ய வருவது வழக்கம். இந்த கோயிலில் பல்வேறு திருப்பணிகள் நடைபெற்று வருகிறது. அந்த வகையில் ஆண்டாள் பிறந்த இடமான ஆடிப்பூர நந்தவனம் மிகவும் புராதாண சிறப்புமிக்க இந்த நந்தவனத்தில் தான் ஸ்ரீவில்லிபுத்தூரில் தோன்றிய பெரிய ஆழ்வார் ஒரு ஆடிப்பூர நாளன்று கோதை ஆண்டாளை சிறு குழந்தையாக கண்டெடுத்த சிறப்புடையது. இந்த சன்னதியில் மார்கழி மாதம் திருமணம் ஆகாத இளம் பெண்கள் ஆண்டாளை நினைத்து திருப்பாவை பாடல்கள் பாடினால் அவர்களுக்கு நல்ல வரன் கிடைக்கும் என்பது ஐதீகம். ஏராளமான பெண்கள் இங்கு வந்து குழந்தை வடிவிலான ஆண்டாள் நாச்சியாரை மனமுருக வேண்டுவது வழக்கம்போல நடைபெற்று வருகிறது. தற்பொழுது உபயதாரர் மூலமாக சுமார் ரு25 லட்சம் செலவில் புதுப்பிக்கப்பட்டு வருகிறது இதற்காக புதிய இரும்பு கம்பிகள் அமைக்கப்பட்டு அதில் முல்லை கொடிகள் படர வைக்கப்பட உள்ளன. மேலும் பல வண்ண மலர் செடிகள் வளர்க்கப்பட்டு வருகிறது மற்றும் இரவு நேரத்தில் ஜொலிக்கக் கூடிய விளக்குகள் வாசனை வீசும் மலர்கள் வைக்கப்பட்டு பராமரித்தல் என ஒவ்வொரு இடமாக மிகவும் கவனத்துடன் புதுப்பிக்கப்பட்டு வருகிறது. இரவு நேரத்தில் ஆண்டாள் பிறந்த நந்தவனம் மின் ஒளியால் ஜொலிக்கிறது இதனைப் பார்க்கும் உள்ளூர் பக்தர்கள் மற்றும் ஆண்டாள் கோவிலுக்கு தினசரி வெளியூர்களிலிருந்து வந்து செல்லும்பல்லாயிரக்கணக்கானபக்தர்களும்மிகுந்தமகிழ்ச்சி அடைந்துள்ளனர்.இதற்கான ஏற்பாடுகளை கோவில் செயல் அலுவலர் சௌ. சக்கரை அம்மாள் மற்றும் கண்காணிப்பாளர் அர்ஜுன் கோயில் பணியாளர்கள் சிறப்பாக செய்து வருகின்றனர்..

## வத்தலகுண்டு அருகே
# மாவீரர் மணிக்குறவனார் 72வது நினைவேந்தல் வீரவணக்கம்!



வத்தலகுண்டு,நவ.17

வத்தலக்குண்டுவில் வனவேங்கைகள் கட்சியின் சார்பில் ஆங்கிலேய அடக்குமுறை சட்டமானகுற்றப்பரம்பரை கைரேகை சட்டத்தை எதிர்த்த மாவீரர் மணிக்குறவனார் 72வது நினைவேந்தல் தினத்தையொட்டி வத்தலகுண்டு பேருந்து நிலையம் அருகே வீரவணக்கம் அனுசரிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு மாநில செயற்குழு உறுப்பினர்கள் தம்பிஇரணியன்,ராஜேஷ் ஆகியோர் தலைமை தாங்கி அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த மணிக்குறவனார் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தி வீர முழக்கமிட்டனர். இந்நிகழ்ச்சியில் மாநில செயற்குழு உறுப்பினர் சக்திஸ்வரன், திண்டுக்கல் மாவட்ட செயலாளர் முத்துக்குமார், மாநில பொதுச் செயலாளர் உலகநாதன், மாநில இளைஞர் அணிசெயலாளர்வாகை குமார் மற்றும் வனவேங்கை கட்சி நிர்வாகிகள் பொதுமக்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# கல்லூரி மாணவி மாயம்!

சிவகாசி நவ. 17

சிவகாசி ஆலமரத்துப் பட்டி எம்.ஜி.ஆர். காலனியை சேர்ந்தவர் ஜெனி பர் மேரி 18. சிவகாசியில் உள்ள கல்லூரியில் முத லாம் ஆண்டு படித்து வந்தார். இந்நிலையில் வீட்டை விட்டு வெளியே சென்றவர் மீண்டும் திரும் பவில்லை. கிழக்கு போலீ சார் விசாரிக்கின்றனர்.



இராமநாதபுரத்தில் வனம் மற்றும் கதர் துறை அமைச்சர்ஆர். எஸ்.ராஜகண்ணப்பன் கூட்டுறவுத்துறையின் மூலம் 72வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா நிகழ்ச்சியில் சிறந்த கூட்டுறவுத்துறைவனகூட்டுறவுசங்கங்களுக்குபாராட்டுச்சான்று வழங்கிபாராட்டினார். உடன்மாவட்டஆட்சித்தலைவர்சிம்ரன்ஜீத் சிங் காலோன், பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர்செ.முருகேசன் திருவாடானை சட்டமன்ற உறுப்பினர்இராம.கருமாணிக்கம் கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் ஜினு அவர்கள், இராமநாதபுரம் நகர் மன்றத்தலைவர்ஆர்.கே.கார்மேகம் அவர்கள் ஆகியோர் உள்ளனர்.



## புதுகோட்டை அருகே
# குழந்தைகள் தினத்தை முன்னிட்டு ஒன்றிய அளவிலான கலைத்திருவிழா!
## வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கி பாராட்டு!!

புதுக்கோட்டை நவ 17

புதுக்கோட்டைஅருகே ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி அக்கச்சிப் பட்டியில் குழந்தைகள் தினத்தை முன்னிட்டு ஒன்றிய அளவிலான கலை திருவிழா போட்டிகளான பரதநாட்டிய ம், கிராமிய நடனம், களிமண் பொம்மை செய்தல் உள்ளிட்ட போட்டிகளில் முதல் மூன்று இடங்களை பெற்ற மாணவ மா ணவிகளுக்கு பரிசுகள் வழங்கி பாராட்டப்பட்டது.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேருவின் பிறந்த தினமான நவம்பர் 14 குழந்தைகள் தின மாக கடைப்பிடிக்கப்பட்டது. இந்நிகழ்விற்கு தலைமை ஆசி ரியர் தமிழ்செல்வி தலைமை வகித்தார். பள்ளி மேலாண்மை குழு தலைவி கலா ராணி முன்னிலை வகித்தார்.

சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட மருத்துவர் சுவாமி நாதன் மாணவர்களுக்கான பரிசு பொருளை வழங்கி பாராட்டினார். பள்ளி புரவலர் சந்திரசேகர் தேசிய கொடியை ஏற்றி வைத்து மாணவர்களுக்கு குழந்தைகள் தினம் குறித்து வாழ்த்தி பேசினார்.

கணித பட்டதாரி ஆசிரியர் மணிமேகலை அனைவரையும் வரவேற்றார். முன்னதாக முன்னாள் பிரதமர் ஜவர்கலால் நேரு புகைப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

மாணவ, மாணவிகள் குழந்தைகள் தின கலை நிகழ்ச்சிக ளை ஆடல், பாடல் மூலம் வெளிப்படுத்தினார்கள். இந்நிகழ்வினை அறிவியல் பட்டதாரி ஆசிரியர் ரகமதுல்லா ஒருங்கி ணைத்து பேசும் பொழுது குழந்தைகளின் உரிமைகள், கல்வி மற்றும் நலன் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இந்தியாவில் குழந்தைகள் தினம் கொண்டாடப்படுகிறது.

இந்தியாவின் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்க ளின் பிறந்தநாளில் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 14 அன்று கொண்டாடப்படுகிறது, அவர் குழந்தைகள் மீது அன்பு கொண்டவர்.

இன்றைய கு ழந்தைகளே நாளைய இந்தியாவை உருவாக்கு வார்கள். குழந்தைகளை நாம் வளர்க்கும் விதம்தான் நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் என ஜவஹர்லால் நேரு கூறியுள்ளார் என்று பேசினார். இந்நிகழ்வில் பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் வெள்ளைச்சாமி செல்விஜாய், ஜெம்மராகினி சகாய ஹில்டா, பகுதி நேர ஆசிரியர் கௌரி, கணனி உதவியாளர் தையல்நாயகி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



தேனி மாவட்டம் குமுளி தேக்கடி அரசு தொடக்கப் பள்ளியில் பண்டிதர் ஜவஹர்லால் நேரு அவர்களின் பிறந்தநாளை கொண்டாடப்பட்டது. இனிப்பு வழங்கி பள்ளியின் தலைமை ஆசிரியர் மற்றும்ஆசிரியருடன்ஜவர்கலால்நேருஅவர்களின்பிறந்ததினத்தைபள்ளியில்கொண்டாடப்பட்டது.

# ராஜபாளையத்தில் பூட்டி இருந்த வீட்டை உடைத்து கொள்ளை!

ராஜபாளையம் நவ 17

ராஜபாளையம் திருவனந்தபுரம் தெருவின் அருகே உள்ள விஜபி நகர் பகுதியில் வசித்து வருபவர் ராஜேஸ்வரி இவரது கணவர் பன்னீர்செல்வம் கணவர் இறந்துவிட்டபடியால் இவர் மற்றும் இவரது மகளுடன் வீட்டில் வசித்து வருகிறார் இந்நிலையில் அமெரிக்காவில் வேலை பார்த்து வரும் இவரது மகன் சென்னைக்கு வந்துள்ளபடியால் அவரைக் காண வேண்டி ராஜேஸ்வரி வீட்டை பூட்டிவிட்டு தனது மகளுடன் சென்னைக்குச் சென்றுள்ளார் இந்நிலையில் இன்று காலை இவர்களை அவ்வப்போது வந்து பார்த்து விட்டு செல்லும் நபரான ரெங்கராஜ் என்பவர் வீடு கதவு திறந்து இருப்பதை கண்டு அதிர்ச்சி அடைந்தார் இது குறித்து ராஜேஸ்வரிக்கும் தெற்கு காவல் நிலையத்துக்கும் கொடுத்த தகவலின் பெயரில் இன்ஸ்பெக்டர் ராஜேஷ் எஸ்ஐ கௌதம் விஜய் ஆகியோர் சம்பவ இடத்திற்கு வந்து பார்த்தனர் இதனைத் தொடர்ந்து விருதுநகரில் இருந்து மோப்பநாய் ராணி வரவழைக்கப்பட்டு வீடு முழுவதும் மோப்பம் பிடித்தபடி சிறு தூரம் ஓடி திருவனந்தபுரம் தெரு சாவடி அருகே நின்றுவிட்டது இதனைத் தொடர்ந்து தடவியல் நிபுணர்கள் வந்து சோதனை நடத்தி வருகின்றனர் இது குறித்து காவல்துறையினர் கூறுகையில் சென்னையிலிருந்து வீட்டு உரிமையாளர்கள் வந்து கொண்டிருக்கின்றனர் அவர்கள் வந்த பிறகு விலை உயர்ந்த பொருட்களை ஏதாவது காணாமல் போய் உள்ளதா போன்ற விபரங்கள் மற்றும் புகாரின் அடிப்படையில் தெரியவரும் ஆனாலும் நாங்கள் பல பகுதிகளில் உள்ள சிசிடிவி கேமரா ஆய்வு போன்ற பல கோணங்களில் விசாரணையில் ஈடுபட்டுள்ளோம் என்றனர்.

# வத்தலகுண்டுவில் வாக்காளர் விழிப்புணர்வு குறித்து மனித சங்கிலி!

வத்தலகுண்டு,நவ.17

வத்தலகுண்டுவில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணிகள் விழிப்புணர்வு மனித சங்கிலி நிகழ்ச்சி காளியம்மன் கோவில் அருகே நடந்தது. இந்நிகழ்ச்சிக்கு நிலக்கோட்டை தாசில்தார் ஜெயபிரகாஷ் தலைமை தாங்கினார். வத்தலகுண்டு பேரூராட்சி செயல் அலுவலர் சரவணக்குமார் முன்னிலை வகித்தார். தமிழ்நாட்டில் வாக்காளர் பட்டியலை தூய்மைப்படுத்தும் வகையில் சிறப்பு தீவிர திருத்தம் எஸ்ஐஆர் 2026 தொடங்கப்பட்டு நவம்பர் 4 முதல் டிசம்பர் 4 வரை வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் தற்போதைய வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ள அனைத்து வாக்காளர்களுக்கும் தனித்துவமான கணக்கெடுப்பு படிவங்கள் வழங்கி வருகின்றனர்.

வாக்காளர் கணக்கெடுப்பு படிவங்களை எப்படி பூர்த்தி செய்வது என்பது சம்பந்தமாக பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துவது குறித்து மனிதசங்கிலி நிகழ்ச்சி நடந்தது. இதில் முதல் நிலை ஒவ்வொரு வாக்காளரின் புகைப்படத்துடன் இருக்கும் இரண்டாவது நிலை வாக்காளர்களின் கூடுதல் விபரங்கள் கோரப்பட்டு இருக்கும்.2002 எஸ்ஐஆர்வாக்காளர் பட்டியலில் சட்டமன்றத் தொகுதி பாகம் எண் மற்றும் வரிசை எண்ணை இடது பக்கத்தில் குறிப்பிட வேண்டும்.வீட்டில் உள்ள எந்த ஒரு வாக்காளரும் தங்களது வீட்டில் அனைத்து உறுப்பினர்களுக்கும் பூர்த்தி செய்து கணக்கெடுப்பு படிவத்தில் கையொப்பமிட்டு வழங்க வேண்டும் என்பது சம்பந்தமான விழிப்புணர்வு நடந்தது.

இந்நிகழ்ச்சியில் பேரூராட்சி தலைமை எழுத்தர் முருகேசன்,துப்புரவு ஆய்வாளர் கருணாகரன்,வருவாய் ஆய்வாளர் பரிமளா கிராம நிர்வாக அலுவலர் சரண்யாநாகேந்திரன்,பாலிடெக்னிக்கல்லூரி மாணவர்கள்,பேரூராட்சி பணியாளர்கள், மகளிர் சுய உதவிக் குழுக்கள்,தாலுகா அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.